අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/96/04/2 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2023.05.

சுற்றறிக்கை இலக்கம் - 22/2023

அனைத்து மேலதிக செயலாளர்கள்
அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள்
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களும்
அனைத்து கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து அரச பாடசாலைகளின் அதிபர்கள்

**பாடசாலை நூலகங்களுக்கு புத்தகங்கள் மற்றும் அச்சிடப்பட்ட மற்றும் அச்சிடப்படாத கற்றல் துணை சாதனங்களை விலைக்கு வாங்குதல் அல்லது நன்கொடையாக பெற்றுக்கொள்ளலில் பின்பற்ற வேண்டிய நியதிகள்/செயன்முறைகள்**

01. இந்தச் சுற்றறிக்கையானது 01.06.2023 முதல் அரச பாடசாலைகள், அரச உதவி பெறும் பாடசாலைகளுக்கு நூலகப் புத்தகங்கள் அல்லது பொருட்களை விலைக்கு வாங்குவது அல்லது நன்கொடையாக பெற்றுக்கொள்வது தொடர்பாக கல்வி அமைச்சு விடுத்த முந்தைய சுற்றறிக்கைகள் மற்றும் உத்தரவுகளை மேவி நடைமுறைப்படுத்தப்படும்.

02. நூலகப் பயன்பாட்டிற்காகப் பெறப்பட்ட அனைத்து புத்தகங்களின் தகவல்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி இரண்டு பயன்பாட்டு ஆவணங்களில் உள்ளிடப்பட வேண்டும்.

2.1 பயன்பாட்டு ஆவணம் A – 49 பக்கங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட புத்தகங்கள் (கல்வி B132 படிவம்)

2.2 பயன்பாட்டு ஆவணம் B – 48 பக்கங்கள் வரையிலான புத்தகங்கள் – (கல்வி படிவம் B 132)

03. நிரல் அமைச்சு, மாகாண சபைகள் அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அல்லது வேறு ஏதேனும் நிதியினால் நூலகத்தின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகங்களுக்கு பின்வரும் நிபந்தனைகள் பொருந்தும்.

3.1 மாணவர்களின் வயது மற்றும் அறிவு நிலைக்கு ஏற்றவாறு வாசிக்க எளிதான மற்றும் எளிமையான மொழியில் எழுதப்பட்ட வாசிக்கும் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையான புத்தகங்கள்.

3.2 ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழி விதிகளுக்கு இணங்குவதாக இருப்பதோடு, பிரதி முழுவதும் மொழி பயன்பாட்டில் சீரான தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். எழுத்துப் பிழைகள், அச்சுப் பிழைகள் மற்றும் உற்பத்திப் பிழைகள் அற்றதாக மற்றும் சொல் இடைவெளி, நிறுத்தற்குறிகள், சரியான தன்மை மற்றும் இழிவளவிலான பிழைகள் இருத்தல்.

3.3 புத்தகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்கள் மற்றும் கல்வி மற்றும் தேசிய நோக்கங்களுடன் ஒத்துப்போகின்றனவாக இருப்பதோடு மாணவர்களின் வயதுக்கு ஏற்ப அவர்களின் மன வளர்ச்சிக்கு உகந்த விடயங்கள், படங்கள் மற்றும் புகைப்படங்கள் போன்றவை அடங்கியிருத்தல்

3.4 எந்தவொரு மதத்தையும், இனத்தையும், இனக்குழுவையும் அல்லது சமூக அமைப்பையும் அவமதிக்கும், இழிவுபடுத்தும் மற்றும் கேலி செய்யும் அல்லது அவர்களுக்கிடையில் பிளவுகள் அல்லது மோதல்களை ஏற்படுத்தும் எந்தவொரு முன்மொழிவு, கருத்து, விடயம் அல்லது படத்தை உள்ளடக்காமை.

3.5 பாடத்திட்டம் தொடர்பான புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் பின்வரும் நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

- சம்பந்தப்பட்ட பாடத்துடன் இணங்குதல்.
- உள்ளீடுகள் துல்லியமானவை மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளமை
- ஏற்றுக்கொள்ளப்பட்ட உளவியல் மற்றும் கல்விக் கோட்பாடுகளின்படி தயாரிக்கப்பட்டமை
- சொற்களின் துல்லியம்.
- புத்தகத்தின் உள்ளடக்க விடயங்கள் தொடர்பான சித்திரங்கள், வரைபடங்கள(Illustrations), புகைப்படங்கள் உள்ளடங்கியிருத்தல்

3.6 முடிந்தவரை தொடர்புடைய படைப்பு/புத்தகங்கள் ISBN எண்ணைக் கொண்டிருப்பது விரும்பத்தக்கது.

3.7 முடிந்தவரை, சமீபத்திய அச்சிட்ட பிரதிகளை வாங்க வேண்டும்.

3.8 புத்தகத்தைப் பயன்படுத்தும் போது பக்கங்கள் விழாமல் இருக்க புத்தக அட்டை பொருத்தமான முறையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

3.9 புத்தகத்தின் விலை நடைமுறையில் உள்ள சந்தை பெறுமதிக்கு ஏற்ப இருக்க வேண்டும் மற்றும் உள்ளடக்க பெறுமதி புத்தகத்தின் விலைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

3.10 புத்தகம் பொருத்தமான தாளில் அச்சிடப்பட வேண்டும் மற்றும் உள் பக்கங்கள் தெளிவாகவும் ஒளிபுகாதாகவும் மை ஊறும் தன்மை அற்றதாகவும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

3.11 முன்பக்க பக்கங்கள் மற்றும் உள்ளடக்கப் பக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதத்தில் இலக்கமிடப்பட்டு தேவைக்கேற்ப கோப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3.12 ஆரம்பப்பிரிவு புத்தகங்களில் வயதுக்கு ஏற்ற வகையில் படங்கள் மற்றும் எழுத்துரு அளவு அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

**04. விலைக்கு வாங்கும் முறை**

4.1 நூலகங்களுக்கு ஆண்டுதோறும் வாங்க வேண்டிய புத்தகங்களின் பட்டியல் வாசகர்களின் தேவை ஆவணங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும்.

4.2 ஒரே நேரத்தில் ரூ.80,000க்கு மேல் பெறுமதியுள்ள புத்தகங்களை வாங்கும் போது, குறைந்தது மூன்று விலைமனு கோரல்கள் இருக்க வேண்டும்.

4.3 மாணவ புத்தக விகிதம் (BOOK RATIO) 1:5 விகிதத்தை (ஒரு மாணவருக்கு 5 புத்தகங்கள்) குறைந்தபட்சமாகக் கருதி, நூலகத்தின் புத்தக சேகரத்தை விரிவுபடுத்த வேண்டி விலைக்கு வாங்கப் பயன்படுத்த வேண்டும்.

4.4 புத்தகங்களை வாங்குவதில் பாடசாலை அடிப்படையிலான தர அளவு மற்றும் கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் மற்றும் பெறுகைக்காக கல்வி செயலாளரால் வழங்கப்பட்ட வலுவிலுள்ள சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டும்.

4.5 பாடசாலை பாடத்திட்டத்துடன் நேரடியாக தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் மேலதிக அறிவுக்கு வாசிக்க ஏற்ற புத்தகங்கள் வாங்கப்பட்ட மொத்த தொகையில் அதிக சதவீதமாக இருக்க வேண்டும் மற்றும் வாங்கப்பட்ட ஒவ்வொரு புத்தகத்தின் தேவை மற்றும் முக்கியத்துவமும் நூலகக் குழுவால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

4.6 ஆரம்ப, 6, 7, 8, 9, 10, க.பொ.த (சாதாரண), க.பொ.த (உயர்தர) என பாடசாலையின் அனைத்து மட்டங்களின் பாடங்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் வகையில் புத்தகங்கள் வாங்கப்பட வேண்டும்.

4.7 அந்த புத்தகங்களை வாங்கும் நிறுவனங்களின் வசதிக்காக, 2017 முதல் பாடசாலை நூலகங்களுக்கான கல்வி புத்தக வெளியீட்டு ஆலோசனை சபையால் அங்கீகரிக்கப்பட்ட

புத்தகங்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு பாடசாலை நூலக நூல் பட்டியலாக வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகப் பட்டியல் கல்வி அமைச்சின் இணையத்தளத்திலும் (www.moe.gov.lk) சேர்க்கப்பட்டுள்ளது என்பதோடு புத்தகப் பட்டியலைத் தயாரிப்பதில் அதைப் பயன்படுத்தப்பட வேண்டும்.

4.8 பாடசாலை நூலக நூற்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள புத்தகங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்கள் தவிர, பாடசாலை நூலகத்துக்கு புத்தகங்கள் தெரிவு செய்யப்பட மற்றும் விலைக்கு வாங்கப்பட பரிந்துரைக்கும் அதிகாரம் கொண்ட நூலகக் குழுவின் விருப்பத்தின் பேரில் வாசகர்களின் தேவைக்காக தயாரிக்கப்பட்ட நூல் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான புத்தகங்களை வாங்கலாம்.

4.9 பாடசாலை மாணவர்களுக்கு பயனுள்ள மற்றும் அவசியமானதான புத்தகம்/புத்தகங்கள் நூற்பட்டியலில் சேர்க்கப்படாமல் இருந்தால் பாடசாலை நூலகக் குழுவின் ஒப்புதலுடன் அவற்றைத் தேர்ந்தெடுத்து வாங்கலாம்.

4.10 பிரதேசத்தின் புத்தக விற்பனையாளர்கள், வெளியீட்டு பதிப்பகங்கள் தேசிய.∴சர்வதேச மற்றும் பிரதேச புத்தக கண்காட்சிகளில் புத்தகங்களை வாங்கலாம் அல்லது எழுத்தாளர் வெளியீட்டாளர்கள் அல்லது தேசிய முகவர்களிடமிருந்து நேரடியாக கொள்வனவு கட்டளை வழங்கி விலைக்குப் பெறலாம்.

4.11 புத்தகங்களை வாங்குவதற்கு தேவையான குறைந்தபட்ச விலைக்கழிவு பின்வருமாறு.

தேசிய வெளியீடுகளுக்கு 20%

இறக்குமதி செய்யப்பட்ட புத்தகங்களுக்கு 15%

கவனத்துக்கு :- புத்தகம் வாங்குவதில் பௌதிக மற்றும் உள்ளடக்க தரம் தேவைப்பட்டால் தவிர அதிக விலைக்கழிவு ஒரு நியதியாக இருக்கக்கூடாது.

4.12 லாப நோக்கங்கள் இல்லாமல் வெளியீடுகளுக்கு விலை நிர்ணயம் செய்யும் கல்வி வெளியீடுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, அரசாங்க நிலவளவை திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்களால் மற்றும் யுனெஸ்கோ போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களால் வெளியிடப்படும் ஆவணங்களுக்கு மேற்கண்ட விலைக்கழிவு கட்டாயமில்லை. அந்த நிறுவனங்களின் புத்தகங்கள் பாடசாலை நூலக நூற்பட்டியலில் சேர்க்கப்படவில்லை, மேலும் அந்த விவரங்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் இணையதளங்களைப் பார்ப்பது சிறப்பு.

உதாரணம் - www.edupub.gov.lk

கல்வி வெளியீட்டு திணைக்களம்

4.13 ஆரம்பப் பிரிவு உள்ள பாடசாலைகளில் சிறுவர் கதைப் புத்தகங்கள் சிங்களம் ∴தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள பாடசாலைக்கு போதுமான அளவில் கொள்வனவு செய்யப்பட வேண்டும். வாசிப்பது, சத்தமாக வாசிப்பது, வழிகாட்டப்பட்ட வாசிப்பு போன்ற மொழிப் பயிற்சிகளுக்கு போதுமானதாக இருக்கும் வகையில் மற்றும் சமச்சீரான வகையிலான எண்ணிக்கையிலான பிள்ளைகளின் புத்தக சேகரிப்புக்கு கிடைக்குமாறு அவற்றை கொள்வனவு செய்ய வேண்டும்.

4.14 மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்துவது அரசாங்கத்தின் முதன்மையான நோக்கமாக இருப்பதால், அதற்கான போதுமான எண்ணிக்கையிலான ஆங்கிலப் புத்தகங்களை வாங்குவது கட்டாயமாகும்.

புத்தகங்கள் தவிர, நூலகத்திற்கு ஏற்ற ஆனால் நூலக வாசகர்களின் பயன்பாட்டிற்குத் தேவையான அச்சிடப்படாத பொருட்களை வாங்கலாம்.

## 5. புத்தகங்கள் வாங்குவதற்கான இடங்கள் மற்றும் கட்டுப்பாடுகள்

5.1 ஒவ்வொரு பாடசாலையும் நூலகக் குழுவின் மூலம் புத்தக சேகரிப்பை மேம்படுத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் புத்தகங்களின் தெரிவை பதிப்பகத்திடமோ அல்லது புத்தக விற்பனையாளரிடமோ ஒப்படைக்கக் கூடாது.

மேற்குறித்த நியதிகளை கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் போது எப்போதும் பாடசாலை மாணவர்களின் வாசிப்பு ஊக்குவிப்பு மற்றும் நூலகத்தின் பயன்பாடு என்பன

எப்பொழுதும் அமையும் வகையில் நியதிகளை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு அதிபர்கள் சார்ந்ததாகும் என்பதனால் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் தேவையான ஆதரவை வழங்க கடமைப்பட்டுள்ளனர் என வலியுறுத்தப்படுகிறது.

எம்.என்.ரணசிங்க

கல்வி செயலாளர்

கல்வி அமைச்சு

பிரதிகள் :-

01. கணக்காய்வாளர் நாயகம், அரச கணக்காய்வு திணைக்களம்

02. தலைவர், தேசிய நூலக மற்றும் ஆவணச் சேவைகள் சபை

03. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவனம்

04. பணிப்பாளர் நாயகம், ஆவணக் காப்பகத் திணைக்களம்